பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 06 2024 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தொடர்பான விசாரணை அறிக்கை 3 மாதங்களுக்குள் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் நலிவுற்ற மக்கள் வீடு கட்டிக்கொள்ளும் வகையில் ஒரு லட்சம் வீடுகள் கட்டிக்கொள்ள மானியம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

- மக்களவை தற்காலிக சபாநாயர் தேர்வு விவகாரத்தை காங்கிரஸ் கட்சி அரசியலாக்குவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

- நீலகிரி, கோவை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

*<<<<>>>>*

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தொடர்பாக முழுமையான அறிக்கை 3 மாதங்களுக்குள் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று ஒருநபர் ஆணைய தலைவரான ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளச்சாராயத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும், கருணாபுரத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களையும் சந்தித்து அவர் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விசாரணை ஆணையம் எடுக்கும் நடவடிக்கைகள் விரைவில் தெரிவிக்கப்படும் என்றும், விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய 3 மாத கால அவகாசம் இருப்பதால் அதற்குள் முழுமையான அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக அவர், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காவல்துறை மற்றும் உயர் அதிகாரிகளுடன் விஷச் சாராய சம்பவம் குறித்து விசாரணை நடத்தினார்.

இந்நிலையில், கள்ளக்குறிச்சியில் விஷச்சாராயம் அருந்தி உயிரிழந்தோர் எண்ணிக்கை 52ஆக அதிகரித்துள்ளது.

இதற்கிடையே இச்சம்பவம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினர் இதுவரை 8 பேரை கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

<<<<>>>>

உதகமண்டலத்தை சர்வதேச சுற்றுலாத் தலமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

கோத்தகிரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சமீபத்தில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் தாம் போட்டியிட்ட நீலகிரி தொகுதியில் வெற்றி பெறாவிட்டாலும், தேர்தலின்போது தொகுதி மக்களுக்கு தாம் அளித்த வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று கூறினார்.

நீலகிரி தொகுதியில் வெற்றி பெற்ற முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ஆ. ராசா மீது 2-ஜி அலைக்கற்றை வழக்கு விசாரணையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் யோகாவை கட்டாயப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், இச்சம்பவம் குறித்து சட்டசபையில் எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்படாதது கண்டிக்கத்தக்கது என்றும் அமைச்சர் திரு. முருகன் கூறினார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனையில் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலும், கள்ளக்குறிச்சி மற்றும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேற்று அவர் சந்தித்துப் பேசினார்.

அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவரிடம் கேட்டறிந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மது அருந்தி நீண்ட நேரம் ஆனவர்கள் தங்களது உடல் உறுப்புகள் ஒவ்வொன்றாக செயலிழந்து வருகிறது என்று தெரிவதற்கு முன்னாள் கூட, மருத்துவமனைக்கு வர தயக்கம் காட்டியதால் உயிரிழப்புகள் அதிகமானதாக கூறினார்.

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 16 பேரில் 8 பேர் நலமுடன் இருப்பதாகவும், 8 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

சேலத்தில் 31 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் நலிவுற்ற மக்கள் வீடு கட்டிக்கொள்ளும் வகையில் ஒரு லட்சம் வீடுகள் கட்டிக்கொள்ள மானியம் வழங்கப்படும் என்று அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று நகர்ப்புற வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் 70 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்று கூறினார்.

சென்னை நாவலூர் திட்டப் பகுதியில் ஒரு கோடியே 25 லடசம் ரூபாய் செலவில் விளையாட்டுத் திடல் அமைக்கப்படும் என்றும், பெரும்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப் பகுதியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் தொழிற்பயிற்சிக் கூடம் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிர் மேம்பாட்டுக்காக 2 ஆயிரம் மகளிருக்கு சிறப்பு சுயதொழில் பயிற்சி அளிக்கப்படும் என்றும் அமைச்சர் திரு. அன்பரசன் கூறினார்.

<<<<>>>>

ப்ளஸ்-1 துணைத் தேர்வுக்கான ஹால் டிக்கெட் வரும் 25ஆம் தேதி வழங்கப்படும் என்று அரசுத் தேர்வுத்துறை இயக்குநர் திரு. சேதுராம வர்மா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், துணைத் தேர்வு அடுத்த மாதம் நடைபெற உள்ள நிலையில், இந்தத் தேர்வு எழுத விண்ணப்பித்துள்ள தனித் தேர்வர்கள், தங்களுக்கான ஹால் டிக்கெட்டுகளை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

இதுதவிர செய்முறை தேர்வுக்கான தேதி குறித்த விவரத்தை தனித் தேர்வர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தின் முதன்மை கண்காணிப்பாளரை அணுகி அறிந்துகொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை கொண்டுவர வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயத்தால் உயிரிழந்தோர் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சம்பவத்திற்கு முதலமைச்சர் முழு பொறுப்பேற்க வேண்டும் என்று கூறினார்.

விஷச்சாராயத்தால் ஏராளமானோர் உயிரிழந்தது அரசின் தோல்வியைக் காட்டுவதாகவும், டாஸ்மாக் மதுக்கடைகளால் ஏராளமானோர் நோயாளிகளாக மாறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இவற்றுக்கு தீர்வு காண மாநிலத்தில் படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்றும் திரு. அன்புமணி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மக்களவை இடைக்கால தலைவர் தேர்வு விவகாரத்தை காங்கிரஸ் கட்சி அரசியலாக்குவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் கட்சி தேவையில்லாமல் இப்பிரச்சினையை பெரிதாக்குவதாகக் கூறினார்.

இடைக்கால தலைவர் என்பது தற்காலிக ஏற்பாடே என்றும், புதிய சபாநாயகர் தேர்வு செய்யப்படும் வரை அவரது செயல்பாடுகளும் ஒரு வரம்புக்கு உட்பட்டதாகவே இருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த திரு. **Bhartruhari Mahtab** மக்களவைக்கு தொடர்ச்சியாக 7 முறை தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ஜெய்ராம் ரமேஷ், திரு. **Bhartruhari Mahtab** மக்களவை இடைக்கால தலைவராக தேர்வு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

மக்களவையில் மிக மூத்த உறுப்பினர்கள் திரு. கொடிக்குன்னில் சுரேஷ் மற்றும் திரு. வீரேந்திர குமார் என்றும், இதில் திரு. வீரேந்திர குமார் பிஜேபி சார்பில் மத்திய அமைச்சராக பொறுப்பேற்றுள்ள நிலையில் திரு. கொடிக்குன்னில் சுரேஷை இடைக்கால தலைவராக நியமித்திருக்கலாம் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

மேற்குதிசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒருசில இடங்களில் இன்று இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப் பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா இரண்டு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

<<<<>>>>

உலகில் பரபரப்பான பணிச்சூழல் உள்ள நிலையில் யோகா, முழுமையான மன அழுத்தத்தை குறைக்கும் அணுகுமுறையைக் கொண்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

<<<<>>>>

மூன்று புதிய குற்றவியல் திருத்த சட்டங்களை மத்திய அரசு அமல்படுத்தக் கூடாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி கடிதம் எழுதியுள்ளார்.

<<<<>>>>

பாசிப்பருப்பு மற்றும் கொண்டைக்கடலை உற்பத்தியில் இந்தியா தன்னிறைவை அடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை மாநகரில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒரு லட்சம் ரூபாய் அரசு மானியத்துடன் 200 பெண்களுக்கு இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் வழங்கப்படும் என்று சமூகநலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் கூறியுள்ளார்.

<<<<>>>>

தேனி மாவட்டத்தில் புதிதாக தொழில் தொடங்குவதற்கு மானியத்துடன் கூடிய கடனுதவி பெற மாவட்ட நிர்வாகத்தை அனுகலாம் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தூத்துக்குடியில் ஒரு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 8 கிலோ எடைகொண்ட மெத்தா பைட்டமைன் என்ற போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்து 2 பேரைக் கைது செய்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

நார்த்சவுண்டில் நடைபெற உள்ள இந்தப்போட்டி, இந்திய நேரப்படி இன்றிரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நேற்று இங்கிலாந்து அணிக்கு எதிரான சூப்பர்-8 சுற்றுப் போட்டியில் தென்னாப்பிரிக்கா 7 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் விளையாடிய தென்னாப்பிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 163 ரன் எடுத்தது.

164 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இங்கிலாந்து அணி, 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 156 ரன் எடுத்தது.

<<<<>>>>